**முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை**
**முன்னிலை திருமதி. பி. கவிதா, பி.ஏ., எல்.எல்.பி.,**
**முதன்மை சார்பு நீதிபதி**

வா.சா.1 தேதி.25.03.2024

| OS.No. | 109/2021 | | |
|---|---|---|---|
| பெயர் | கலைச்செல்வி | க/பெ. | |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு குறுக்கு விசாரணை

பிரதிவாதிகளை எப்படி தெரியும் என்றால் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள். ரூ.1,60,000/-த்தை எதற்காக கடன் வாங்கினார் என்றால் எனது சொந்த செலவிற்கும், பெண்ணின் திருமணத்திற்காகவும் கடன் வாங்கினார். எதிர்மனுதாரர் ஒரு மாதத்தில் பணத்தை திரும்ப தருவதாக சொல்லி கைமாத்தாக வாங்கி சென்றார்கள். நான் வட்டிக்கு விடும் தொழில் செய்யவில்லை. விவசாயத்திற்காக அந்த பணத்தை நான் வைத்திருந்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.1 ஸ்டாம்புக்கு மேல் இரண்டு கையெழுத்துகளும், ஸ்டாம்புக்கு கீழே இரண்டு கையெழுத்துகளும் போடப்பட்டுள்ளன என்றால் சரிதான். ஸ்டாம்பில் மேலே உள்ள கையெழுத்துக்கள் மற்றும் கீழே உள்ள கையெழுத்துக்கள் வெவ்வேறு மையினால் போடப்பட்டுள்ளது என்றால் இல்லை, ஸ்டாம்புக்கள் மீது போடப்பட்டுள்ளதால் கையெழுத்தின் மை வெவ்வேறாக தெரிகிறது. ஸ்டாம்பில் உள்ள கையெழுத்துக்களும், கீழே உள்ள கையெழுத்துக்களும் வெவ்வேறு நபரால் போடப்பட்டுள்ளதாக உள்ளது என்றால் இல்லை, ஒன்றாக தான் உள்ளது. வா.சா.ஆ.1 பின்பக்கத்தில் 15.04.2018 ரூ.1,00,000/- வரவு வைக்கப்பட்டுள்ளதாக உள்ளது என்றால் சரிதான், அவ்வாறு வரவு வைத்தார்கள். அங்கே மீத ரூபாய் எவ்வளவு உள்ளது என்று நான் எழுதி வாங்கவில்லை என்றால் சரிதான். அன்றைய தினம் பணம் கொடுத்தற்கு ஆதரவாக சாட்சிகள் யாரிடமும் கையெழுத்து பெறவில்லை என்றால் சரிதான். நான் அனுப்பிய அறிவிப்பை பெற்றுக்கொண்டு பிரதிவாதிகள் பதில் அறிவிப்புகள் அனுப்பினார்கள் என்றால் சரிதான். பிரதிவாதிகள் 24 மாதத்திற்கு மாதம் ரூ.4000/- வீதம் என்னிடம் வட்டி கொடுத்துள்ளார்கள் என்றால் இல்லை. 15.04.2018 அன்று பாக்கி வட்டித்தொகை எவ்வளவு கொடுக்க வேண்டும் என்று நான் எழுதி வாங்கவில்லை என்றால் சரிதான். எனது கணவர் வட்டிக்கு விடும் தொழில் செய்கிறாரா என்றால் இல்லை. வா.சா.ஆ1 ல் ரூபாய் நூற்றுக்கு 1.50 பைசா வட்டி என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது வழக்கில் நான் ரூபாய் நூற்றுக்கு 1.50 பைசா வட்டி சேர்த்து தான்

கேட்டுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதிகள் குடும்ப செலவிற்காகவும், வியாபார அபிவிருத்திக்காகவும் பணம் பெற்றதாக கடனுறுதிச்சீட்டில் கூறப்பட்டுள்ளதால் அவர்கள் என்ன வியாபாரம் செய்தார்கள் என்றால் 1ம் பிரதிவாதி காசுக்கடைத்தெருவில் இரும்பு வியாபாரம் செய்தார். பிரதிவாதிகளிடம் ரூ.1,00,000/– வரவு பெற்றதற்கு எனது கணவர் அவர்களது நோட்டில் அதை எழுதி கையெழுத்து போட்டுக் கொடுத்துள்ளார். ரூ.1,60,000/–த்தை எந்த வங்கியிலிருந்து நான் எடுத்தேன் என்றால் ரூ.60,000/– கையில் வைத்திருந்தேன். மீத ரூ.1,00,000/–த்தை வடபாதிமங்கலம் ஸ்டேட் பாங்க்கிலிருந்து எடுத்தேன். வடபாதிமங்கலம் ஸ்டேட் பாங்க்கில் உள்ள எனது கணக்கு பட்டியலை என்னால் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். அந்த வங்கி கணக்கு எனது பெயரிலுள்ளது. நான் 2023ல் பான் கார்டு பெற்றேன். 2016 ல் என்னிடம் பான் கார்டு இல்லை. நான் பிரதிவாதிகளுக்கு ரூ.1,00,000/– கடன் கொடுத்தேன் என்றும், அவர்கள் அதை வட்டியுடன் சேர்த்து திரும்ப கொடுத்துவிட்டார்கள் என்றாலும் சரியல்ல. அவர்கள் வாங்கிய ரூ.1,00,000/–த்தை வட்டியுடன் திரும்ப கொடுத்துவிட்ட பின்னர் அவர்களிடம் பெற்றிருந்த கடனுறுதிச்சீட்டை திரும்ப கொடுக்காமல் அதை வைத்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ரூ.49,000/–த்திற்கு மேல் வங்கியிலிருந்து பணம் எடுக்க வேண்டுமென்றால் பான் கார்டு அவசியம் என்றும், நான் பான் கார்டு பெறாமல் வங்கியிலிருந்து பணத்தை எடுத்ததாக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் எனது வங்கி கணக்கு தாக்கல் செய்தால் அதை பற்றி உண்மை நிலவரம் தெரிய வரும் என்றால் சரியல்ல, சாட்சி தானாக விவசாய கடனாக நகையை வைத்து வாங்கிய பணத்தை கொடுத்ததாக கூறுகிறார். நான் கூடுதலாக அசல் மற்றும் வட்டித்தொகை கேட்டு வழக்கை தாக்கல் செய்துள்ளதால் எனது வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.